**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 410/2019**

15.06.2023 வா.சா.2 திருமதி.மாரியம்மாள்

**1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில்குறுக்கு விசாரணை :-**

1. பிராது சொத்தின் சர்வே எண்.190/2. அதன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 11 செண்ட். சர்வே எண் 190/2 1993 ம் வருடம் அரசாங்கத்தால் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு நிலம் இல்லாத நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சர்வே எண் 190/2 சொத்தில் பட்டா வழங்கப்படவில்லை. பிராது சொத்து எனக்கோ, என் தாய் தந்தையர் மற்றும் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட கிரைய ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை யார் எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் தேதி தெரியவில்லை, ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கப்பட்டதாக குறிப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தை என் தாத்தாவோ, அப்பவோ எந்த காலத்திலும் கிரையம் வாங்கியது இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.190/2 ல் உள்ள 1 ஏக்கர் நிலத்தை பொறுத்து சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே பட்டா வழங்கப்பட்டு அதில் பல நபர்கள் வீடு கட்டி அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. அதில் மீதி இருந்த 1 ஏக்கர் 11 செண்ட் நிலத்தையும் 1993 ம் ஆண்டு பிரிக்கப்பட்டுபல நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. 1 ம் பிரதிவாதியின் மனைவி பெயர் கோமதி என்றால் சரிதான். சர்வே எண் 190/2 ல் கோமதிக்கு வழங்கப்பட்ட பட்டா இடத்தில் என் தாயார் மற்றும் சித்தி இடையூறு செய்ததால் கோமதி அசல் வழக்கு எண் 410/2006 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவர் பொய்யாக தாக்கல் செய்தார், இந்த சர்வே எண்ணில் அவருக்கு சொத்து இல்லை. மேற்படி வழக்கில் கோமதிக்கு ஆதரவாக 08.12.2006 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தாயார் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் 1 ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவிக்கு எதிராக அசல் வழக்கு எண் 759/2008 தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு நாங்கள் நடத்ததால் 02.09.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் சர்வே எண் 190/2 ல் வீடுகள் மட்டும் தான் உள்ளது என்றாலும் அதில் நான் கூறியவாறு விவசாய நிலமோ மரங்களோ இல்லை என்றால்

சரியல்ல.

3. தாவா சொத்தில் கிணறு உள்ளதற்கான ஆவணம் எது வும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண் துலங்காது என்றால் சரிதான். 190/2 க்கு எங்கள் குடுமத்தில்உ ள்ள யார் பெயரிலாவது பட்டா உள்ளதா என்றால் இல்லை. 190/2 க்கு 1924 லிருந்து வா.சா.ஆ. 5 முதல் 8 வரையிலான வில்லங்க சான்றிதழில் என் தாத்தா கிரையம் வாங்கியது துலங்குமா என்றால் துலங்கும். பிராது சொத்துக்களை என் தாத்தா ஒரு காலத்திலும் கிரையம் வாங்கியது கிடையாது என்றாலும் அது அரசு புறம்போக்கு நிலம் என்றாலும் சரியல்ல. 03.03.2019 அன்று நான் அளித்த புகாரின் பேரில் அது அரசாங்க நிலம் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் படிமனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணத்தில் இவ்வழக்கின் தரப்பினர்கள் யாரும் அரசாங்கத்தால் பட்டா பெற்ற நபர்கள் இல்லை என்றால் சரியல்ல, பட்டா பெற்ற நபர்கள் யாரையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகளுக்கு சர்வே எண்.190/2 ல் பட்டா வழுங்கப்பட்டதாக கட்சி செய்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 190/2 ல் எங்களுடைய அனுபவமே இல்லை என்பதால் நான் கோரிய நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 190/2 ல் என் தாத்தாவோ என் அப்பாவே விவசாயம் செய்தது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் பிராது சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தில் மாட்டு கொட்டகை மற்றும் ஒரு சின்ன வீடு உள்ளதாகவழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆதியில் என் தாயாரை பிரதிவாதிகள் இடையூறு செய்ததாகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. என் தாயார் இறந்தவுடன் நிர்நதர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கு முடிவிற்கு வந்துவிடும் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் 190/2 ல் பொது மக்களால் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றாலும் அதில் எங்களுக்கோ எங்கள் வகையாறாவிற்கோ உரிமையோ அனுபவமோ இல்லை என்றாலும் சரியல்ல.

<u>**2 முதல் 4 , 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.